**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.84 & 85 /2024 – PW- 2**

| | |
|---|---|
| Name | திரு. குமார் |
| Husband/Father Name | அரசப்பன் |
| Village /Area | பள்ளூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 55 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.07.2025.

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 ஜெயக்கொடி மற்றும் இறந்த நபர் கௌதம் எனது உறவினர்கள். 20.06.2021 அன்று ஞாயிற்று கிழமை நான் விடுமுறை என்பதால் வீட்டில் இருந்தேன். சுமார் 02.00 முதல் 02.45 மணியளவில் கௌதம் என்பவருக்கு யாரோ தொலைபேசி மூலம் வர சொன்னதாக சொல்லி செல்வதாக ஜெயக்கொடி என்பவர் என்னிடம் சொன்னார் அதன் அடிப்படையில் நானும் ஜெயக்கொடியும் தனபால் என்பவரின் பம்பு செட் அருகே சென்று பார்த்தோம். அப்போது கௌதம் அவருடைய நண்பர்கள் இருவருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அங்கே 2 இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களும் அருகில் உள்ள புதரில் இருந்த வந்த நபர்களும் கௌதம் என்பரை கத்தியால் தாக்கினார்கள். மொத்தம் 8 நபர்கள் வந்திருந்தார்கள் அதில் சரத் மற்றும் விஜயக்குமார் என்பவரை நான் பார்த்தேன். மீதமுள்ள 6 நபர்கள் கௌதமை கத்தியால் தலை மற்றும் தோள்பட்டை, கை மற்றும் காலில் வெட்டினார்கள். உடனே நானும் என்னுடன் வந்த ஜெயக்கொடியும் சத்தம் போட்டோம்.

ஊர்காரர்கள் ஓடி வந்தார்கள். பிறகு அங்கு வந்த நபர்கள் தப்பித்து ஓடிவிட்டார்கள். பிறகு நானும் ஜெயக்கொடியும் சென்று போலீசாரிடம் நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நான் சம்பவ தினத்தன்று பார்த்த நபர்களில் 5 நபர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். இடமிருந்து வலமாக நின்றவர்களில் வெள்ளை சட்டை அணிந்து வந்த பகத்சிங், பக்கத்து ஊர சேர்ந்த பார்வேந்தன், 4வதாக நின்றிருக்கும் எதிரி தினேஷ், 5–வதாக நின்றிருக்கும் எதிரி திலிப், 6வதாக நின்றிருக்கும் எதிரி அப்பு, 7வதாக நின்றிருக்கும் எதிரி நிஷாந்த் ஆகியோர்கள் சம்பவத்தன்று சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் ஆவார்கள். இது சம்பந்தமாக ஏற்கனவே குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் அளித்துள்ளேன். என்னிடம் காட்டுப்படும் வாக்குமூலம் தான் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் என்னால் கொடுக்ப்பட்ட வாக்குமுலம் ஆகும் அது அதசா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது( எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன்) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் 1 முதல் 8 வரை தரப்பில் குறுக்கு விசாரணை :**

நானும் நான் கூறிய ஆஜர் எதிரிகள் ஓரே ஊரில் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். நான் கூறிய பகத்சிங் மற்றும் நிஷாந்த் ஆகியோர் நான் வசிக்கும் தெருவில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் பிறந்ததில் இருந்த அதே பகுதியில் தான் வசித்து வருகிறேன். நான் கூறிய எதிரிகள் மற்றும் அவரது பெற்றோர்கள் ஆகியோரை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். சம்பவம் தினத்தன்று இறந்த கௌதமிற்கு யாரோ ஒரு நபர் போன் செய்ததன் அடிப்படையில் அவர் சென்றாக கூறினேன் யார் அந்த நபர் என்று நான் கூறவில்லை என்று

சொன்னால் சரிதான். போலீஸ் விசாரணையிலும் நான் அந்த நபரின் பெயரை கூறியிருந்தேனா என்றால் நான் கூறவில்லை. சம்பவம் நடந்த தினம் முதல் இன்றைய தேதி வரை கௌதமிற்கு போன் செய்த நபர் யார் என்று எனக்கு தெரிய வந்ததா என்றால் தெரியவந்தது. அவரை பற்றிய விவரத்தை நான் நீதிமன்றத்தில் கூறவில்லை என்றால் சரிதான். அசா.1 ஜெயக்கொடி எனது சித்தப்பா மகனின் மனைவி. இந்த வழக்கில் இன்று சாட்சிகளாக வந்துள்ளவர்கள் எனது உறவினர்கள் என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊரில் மதிக்கதக்க பொது நபரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு ஓடி வந்த ஊர் பொதுமக்கள் சுமார் 50 நபர்கள் இருப்பார்களா என்றால் அதற்கு மேலாக இருப்பார்கள். அந்த நபர்கள் சம்பவ இடத்தில் இறந்த கௌதமின் உடலை பார்த்திருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். அரக்கோணத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் எங்கள் கிராமம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எங்களது கிராமம் பேருந்து செல்லும் சாலைக்கு அருகில் தான் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து 200 அடி தொலைவில் மண் சாலை உள்ளது என்று சொன்னால் சரிதான். மெயின் ரோட்டில் இருந்து மண் சாலை 200 அடி தொலைவில் உள்ளது. சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு E.B Office வழியாகவும் செல்லலாம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு நானும் ஜெயக்கொடியும் மேற்படி 2 வழிகளில் எந்த வழியில் சென்றோம் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். காரணம் நானும் ஜெயக்கொடியும் சம்பவ இடத்திற்கு செல்லவில்ல என்றும் இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறனா என்றால் சரியல்ல. நான் பட்டய படிப்பு படித்துள்ளேன்.

நான் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக ஓட்டுநர்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றோரு இடத்திற்கு செல்வதற்கு Google Map யை பயன் படுத்துவார்கள் என்றும் அவ்வாறு நான் பயன் படுத்தினனா என்றால் இல்லை. எனது வீட்டில் இருந்து சம்பவம் நடந்தாக கூறப்படும் இடம் எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. கிழக்கு பக்கத்திற்கு செல்ல வேண்டும் என்றால் 30 அடி பைமாஷ் கால்வாயை சுற்றிதான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. புழக்கடை வழியாகவும் செல்லலாம். புழக்கடை வழியாக செல்வது தான் எனக்கு மிகவும் எளிது என்று சொன்னால் சரிதான். நான் நடந்து சென்றாலும் ஓடினாலும் 2 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்று விடலாம் என்று சொன்னால் சரிதான். சம்பவ தினத்தன்று நானும் ஜெயக்கொடியும் அவசர அவசரமாக அவ்வாறு தான் சென்றோம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு எவ்வாறு சென்றோம் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் கூறியது போல் தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் புழக்கடை வழியாக சென்றது 3 வது வழி என்று சொன்னால் நாங்கள் எப்போது அந்த வழியாக தான் செல்வோம். சம்பவ இடத்தில் புதர் எந்த திசையில் இருந்தது என்றால் வடக்கு திசையில் இருந்தது. அந்த புதர் சுமார் 30 – 40 ஏக்கர் விஸ்திரனம் கொண்டது என்று சொன்னால் அவ்வளவு ஏக்கர் இருக்காது. ஆஜர் எதிரிகளில் எந்தெந்த எதிரிகள் புதரில் இருந்து வந்தார்கள் என்று நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் எந்தெந்த எதிரிகள் வாகனத்தில் வந்தார்கள் என்ற விவரத்தை நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எந்தெந்த எதிரிகளின் கைகளில் எந்தெந்த ஆயுதம் இருந்தது என்ற விவரத்தை

நான் நீதிமன்றத்தல் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று எத்தனை கத்திகளை பார்த்தேன் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த நெமிலி காவல் நிலையத்திற்கு அவசரமாக சென்றால் அரை மணி நேரத்திற்கு மேல் ஆகும். சுமார் 35 நிமிடம் ஆகும். நான் கூறுவது போல் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் அடுத்த 35 நிமிடத்தில் நான் காவல் நிலையத்தில் இருந்திருக்க வேண்டும் என்று சொன்னால் நான் மாலை 06.00 மணிக்கு தான் காவல் நிலையம் சென்றேன். சம்பவ தினத்தன்று நான் Turn Duty யில் இருந்தேன் என்றும் சம்பவத்தை பற்றி நான் கேள்வி பட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றும் அதனால் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன் என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நான் வீட்டில் தான் இருந்தேன். அரை மணி நேரத்தில் புகார் கொடுக்க வேண்டிய நான் 5 மணி நேரம் காலதாமதாக புகார் கொடுத்ததற்கான விளக்கத்தை நான் போலீஸ் விசாரணையிலோ நீதிமன்றத்திலேயோ கூறவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுப்பதற்கு முன்பாக ஊராட்சி மன்ற செயலாளர் கொடுத்த தகவலின் பேரில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து இறந்த நபரின் உடலை எடுத்து சென்றார்கள். அந்த ஊராட்சி மன்ற செயலாளர் பெயர் ஜெயசீலன். அந்த ஜெயசீலன் தான் காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தார் என்று போலீசார் விசாரணையிலோ அல்லது வேறு விதமான விசாரணையிலோ கூறினேனா என்றால் இல்லை. இறந்த கௌதமின் மீது பாசம் மற்றும் பற்று அதிகமாக என்றால் ஆமாம் . அந்த சவத்தை நான் கையில் எடுப்பதற்கும் அல்லது தூக்கி அணைப்பதற்கோ முயற்சித்தேனா என்றால் இல்லை. அதோ போல் என்னுடன் வந்த ஜெயக்கொடியவது

தனது மகனின் உடலை தூக்கி அணைப்பதற்கு முயற்சிதாரா என்றால் இல்லை இருவரும் பயத்தில் இருந்தோம். நானும் அசா.1 ம் சம்பவ சாட்சி இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் மகனை பறிக்கொடுத் அசா.1 அவரது மகனின் உடலை வாரி அணைத்திருப்பார் என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இறந்தவரின் உடலை முதன் முறையாக மருத்துவமனையில் பார்தேனா என்றால் சம்பவ இடத்தில் தான் பார்த்தேன். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. சம்பவ இடத்தில் இறந்த கௌதமின் தலை வடக்கு பக்கமாக இருந்தது. அப்படி என்றால் இறந்தவரின் கால் எந்த திசையில் இருக்கும் என்றால்  தெற்கு பக்கமாக தான் இருந்தது.  நான் பார்தத சவத்தின் மீது இருந்த காயங்களை நான் நீதிமன்றத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் பார்த்த சவத்தின் உடல் மல்லார்ந்து இருந்தாரா அல்லது திரும்பி இருந்ததா என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.  நான் போலிஸ் விசாரணையின் போது கையொப்பம் இட்டேன் எத்தனை கையொப்பம் இட்டேன் என்று நியாபகம் இல்லை. 2–ற்கு மேற்பட்ட கையொப்பம் செய்திருப்பேனா என்றால் செய்திருப்பேன். எந்தெந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்று என்னால் கூற முடியுமா என்றால் கூறமுடியாது. நான் பட்டய படிப்பு படித்துள்ளதால் எந்த ஆவணத்தையும் படித்து பார்க்கமால் கையொப்பம் இடமாட்டேன் என்று சொன்னால் சரிதான்.  சம்பவம் நடந்த பிறகு போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு எத்தனை முறை வரவைத்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்று புகார் கொடுப்பதற்காக 1 முறை சென்றேன்.  ஏற்கனவே நான் வாலாஜா நீதிமன்றத்திற்கு சென்று நடந்த சம்வத்தை பற்றி சாட்சியம் அளித்துள்ளேன.  அங்கு அளித்த சாட்சியம் பற்றி எனக்கு நியாபகம் உள்ளது.  வாலாஜா

நீதிமன்றத்தில் கூறிய விவரத்தை தான் இந்த நீதிமன்றத்திலும் கூறினேன். போலீஸ் மூலமாக எனக்கு கொடுத்த அழைப்பாணையின் அடிப்படையில் தான் நான் வாலாஜா நீதிமன்றத்திற்கு சென்றேன். வாலாஜா நீதிமன்றத்திற்கு நாங்கள் நால்வரும் சென்றோம். நேரடியாக நாங்கள் வாலாஜா நீதிமன்றத்திற்கு சென்றோமா அல்லது போலீசாருடன் சென்றோமா என்றால் 1 காவலருடன் சென்றோம். நாங்களாகவே நீதிமன்றத்திற்கு சென்றோம். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த நேரம் பற்றி எனக்கு நியாபகம் இல்லை. எங்களுக்நகு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பததற்கு உயர் அதிகாரிகள் யாரும் சொல்லிகொடுக்கவில்லை ஒரே ஒரு காவலர் மட்டும் தான் நடந்த விவரத்தை கூறுமாறு சொன்னார். நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு சென்று ஆய்வாளர் சொல்லி கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்ததாக போலீசார் என்னை எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் வாலாஜா நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்து வந்த பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. சம்பவம் நடந்த பிறகு வாலாஜா நீதிமன்றம் செல்லும் வரை போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை. நான் சம்பவ சாட்சியும் இல்லை என்றும் இறந்த நபர் எனது தம்பி மகன் என்வபதால் சம்பவத்தை மிகைபடுத்தி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் யாரையும் நான் காவல் நிலையத்தில் பார்க்கவில்லை. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சென்ற அன்றே நீதிமன்றத்தில் என்னுடைய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

வாக்குமூலம் பதிவு செய்ததற்கு முன்பு நான் இரண்டு  முன்று முறை குற்றவியல் நீதித்துறை நடுவரை சந்திக்கவில்லை. இறந்த நபரின் உடல் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தது என்று எனக்கு தெரியாது நாங்கள்  சென்று  காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பே சம்பவ இடத்தில் இருந்து சவம் அப்புறப்படுத்தப்பட்டது. என்னுடைய முதல் விசாரணை சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்./—திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**